| | |
|---|---|
| Publication: Tamil Sudar | Pg No: 4 |
| Edition – Print | Date – 21.09.2021 |

SEOY Award By Schwab Foundation & Jubilant Bhartia Foundation

# ஸ்வாப் அறக்கட்டளை - ஜூபிலண்ட் பார்சியா மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட சமூக தொழில்முனைவோர் விருது

**சென்னை ,செப்.21-**

உலக வர்த்தக மன்றத்தின் கிளை அமைப்பான ஸ்வாப் ஃபவுண்டேஷன் ஃபார் சோஸியல் ஏண்ட்ர்ப்ரொனர்ஷிப் மற்றும் ஜூபிலன்ட் பார்சியா அறக்கட்டளை, ஜூபிலன்ட் பார்சியா குழுமத்தின் ஒரு இலாப நோக்கமற்ற அமைப்புடன் இணைந்து இன்று 12-வது இவ்வாண்டின் சமூக தொழில்முனைவோர் (SEOY) விருது - இந்தியா 2021 விருதிற்காண இறுதிப் போட்டியாளர்களை அறிவித்தது.

(SEOY) விருது - இந்தியா 2021 விருதிற்காக இறுதிப் போட்டியாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாற்றல் மிக்க சமூகத் தொழில் முனைவோர்கள் பின்வருமாறு: 1. அபர்ணா ஹெக்டே, ஆர்ம்மன்; www.armman.org , 2. சீமா பிரேம், ஃபியா குளோபல்; www.fiaglobal.com , 3. பிரன்ஷூ சிங்கால், கரோ சாம்பவ்; www.karosambhav.com , 4. சுச்சின் பஜாஜ், உஜாலா சிக்னஸ் www.ujalacygnus.com .

SEOY விருது, பல்வேறு துறைகளில் பெரிய அளவிலான, உன்னதமான அமைப்புரீதியிலான மாற்றங்களை ஏற்படுத்திவதில் உள்ள சவால்களை எதிர்கொள்ளவும், உள்ளடக்கிய வளர்ச்சியை உண்டாக்குவதிலும் உறுதியுள் ளம் கொண்டிருக்கும் வெற்றிகரமான சமூக தொழில் முனைவோரை அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள் ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட இறுதிப் போட்டியாளர்கள், தாய்மை மற்றும் குழந்தை நலப் பராமரிப்பு, நிதிச் சேவைகள், குறைந்த, சுற்றுப் பொருளாதாரம் (மின்-கழிவு, பிளாஸ்டிக் பேக்கேஜிங் கழிவுகளின் மறுசுழற்சி), பேட்டரிக் கழிவுகள் மற்றும் கண்ணாடி மற்றும் வசதி குறைந்தவர் களுக்கான உயர்தர மூன்றாம் நிலை சுகாதார சேவைகள் ஆகிய துறைகளில் பணிபுரியும் தொழில் நுட்ப வல்லுநர்களாவர்.